# பொன்னியின் செல்வன் நாவலில் பெண் கதாபாத்திரங்களின் ஆளுமை

# The Empowerment of Female Characters in Ponniyin Selvan Novel


பார்வதி வஜிந்திரம் / Parvathi Wajindram[1]

சுஹாசினி பாலன் / Shuhasyini Balan[2]



Date of submission: 2023-10-04
Date of acceptance: 2023-11-02
Date of Publication: 2023-12-28



Corresponding author's Name: Parvathi Wajindram
Email: 17010961@siswa.um.edu.my



**Abstract**

The introduction of novels in Tamil literature was made by Tamil scholar Vedhanayagam Pillai in 1876. Since then, Tamil literature has recognized novels as a popular genre. Tamil novel literature has a distinct place reserved for Kalki Krishnamurthy among its well-established authors. His Ponniyin Selvan novel was recognized as the pinnacle of Tamil novels, centered around Chozha Empayar. In the novel, powerful characters were introduced who exhibited many traits of credibility. The female characters were particularly impressive in their empowerment qualities, challenging oppression and domination. Thus, the novel is academically conceived to explore the diverse power practices of the female characters from a feminist point of view.



**Keywords:** Ponniyin Selvan, Power, Empowerment, Women in literature, Politics, Tamil literature, Character and characterization, Feminism, Novel


## முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் நாவல் இலக்கியம் அல்லது புதினம் என்பது புதிய வரவு. தமிழில் முதன் முதலில் நாவல் இலக்கியம் 1876இல் வேதநாயகம் பிள்ளை என்றத் தமிழறிஞர் இயற்றிய 'பிராதப முதலியார் சரிதிரம்' எனும் நாவலின் மூலமாக அறிமுகமானது. இத்தொடக்கம் கண்டு நாவல் இலக்கியம் தமிழில் ஒரு தனித்த இலக்கியமாக உருவெடுத்தது (Varatharasan, 1992, p.286). இது தொடங்கி நடேச சாஸ்திரி, இராஜம் ஐயர், மாதபவைய்யர், திரு.வி.கல்யாணசுந்தரனார், மு.வரதராசனார் போன்ற ஆளுமை மிக்க பல நாவலாசிரியர்கள் தமிழில் நாவல் இலக்கியங்களை உருவாக்கினர். இவர்களுள் தமிழ் நாவல்களுக்கு ஒரு தனிச்சிறப்பைப் பெற்று தந்தவர் ஆசிரியர் ரா.கிருஹ்ணமூர்த்தி என்ற கல்கி (Varatharasan, 1992, p.287, 288, & 289).

ஆசிரியர் கல்கி எழுதிய நாவல்களுள் 'பொன்னியின் செல்வன்' எனும் வரலாற்று நாவல் இவருக்குப் பெரும் புகழைப் ஈட்டித் தந்தது. தமிழ் நாட்டில் சோழர் வரலாற்றை நன்கு ஆராய்ந்து, சோழர் காலத்து நாகரிகம், மக்களின் பழக்கவழக்கங்கள், அவர்களின் மனநிலை ஆகியவற்றைத் தெளிவாக ஆராயந்து இந்நாவலை உருவாக்கியுள்ளார். வரலாற்றுப் பார்வையின் அடிப்படையில்


[1]The author is a research student in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. 17010961@siswa.um.edu.my

[2]The author is a research student in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. 17033635@siswa.um.edu.my

எழுதப்பட்ட இந்நாவலில், ஆளுமை மிக்கப் பல கதாமாந்தர்கள் முதிர்ந்த உலக அனுபவத்தை வெளிபடுத்தியுள்ளனர் (Varatharasan, 1992; Sankaravelayuthan, 2019 & Sundaram, 2020).

மேலும், இந்நாவலில் அமைத்துள்ள பெண் கதாபாத்திரங்கள் பல்வேறு சூழ்நிலைகளில் அடையாளங்காட்டியுள்ள வளர்ச்சியும், போராட்டமும், அப்பாத்திரங்கள் எதிர்கொண்ட இன்னல்களும், குறிகோள் களும் இந்நாவலுக்குத் தனித்துவத்தைக் கூட்டியுள்ளது. இந்நாவலைப் பொருத்தவரையில் ஆண் கதாபாத்திரங்கள் எத்துணை முக்கியத்துவம் உடையனவோ அதற்கு ஈடாகப் பெண் கதாபாத்திரங்களையும் சமைத்துள்ளார் கல்கி (Shaa, 2018 & Mohan, 2023). அவ்வகையில் தற்போதைய ஆய்வானது பொன்னியின் செல்வன் நாவலில் பெண் கதாபாத்திரங்களின் ஆளுமையை ஆய்வு செய்வதாக அமைகிறது. இதற்காகப் பெண்ணியக் கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டைக் கொண்டு பொன்னியின் செல்வன் நாவலில் தோன்றும் முக்கியமான பெண் கதாபாத்திரங்களின் ஆளுமைத்திறனை எவ்வாறெல்லாம் கல்கி வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆய்வுப்பூர்வமாக இக்கட்டுரை நிறுவுகிறது.

## ஆய்வின் நோக்கம்

தற்போதைய ஆய்வுக் கட்டுரை இரண்டு நோக்கங்களை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை:

1) பொன்னியின் செல்வன் நாவலில் பெண்களின் கதாபாத்திரத்தின் முக்கியத்துவத்தை அடையாளம் காணுதல்.

2) பெண்ணியக் கோட்பாட்டை முன்னிறுத்தி பொன்னியின் செல்வன் நாவலில் தோன்றும் பெண் கதாபாத்திரங்களின் தனித்துவ ஆளுமைகளையும் அவர்களின் முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வு செய்தல்.

## ஆய்வுச் சிக்கல்

அடிப்படையில் நாவல் இலக்கியம் என்பது மக்களிடையே மனமகிழ் படைப்பாகவே பார்க்கப்படுகிறது. மற்ற அறிவுசார் படைப்புகளாகிய கட்டுரைகள், நூல்கள், செய்திகள் போன்றவற்றைக் காட்டிலும் நாவல் இலக்கியங்கள் வாசகர்களிடத்தே மிகப்பெரிய வரவேற்பைப் பெறுவதற்கு இதுவே அடிப்படைக் காரணம் எனலாம் (Goody, 2006). ஆனால் இலக்கியப் படைப்புகளாவன மக்களின் மனமகிழ் சாதனம் எனும் நிலைப்பாட்டையும் தாண்டி, அரசியல், சமூகவியல், போராட்டம், தத்துவம், நம்பிக்கை, ஆன்மீகம், வரலாறு எனப் பல்வேறு கோணங்களில் சிந்தனையைத் தூண்டக் கூடியது என்பது இதன் உட்பொருள் நிலைப்பாடு (Swingehood, 1975 & Jameson, 1988).

இச்சிந்தனையின் அடிப்படையில் காணும்போது, பொன்னியின் செல்வன் நாவலானது இலக்கிய உலகில் மிகச் சிறந்த மனமகிழ் இலக்கியமாக உருவாக்கப்பட்ட போதும் இது அந்நிலையில் மட்டும் நின்றுவிடாமல், அதனைக் கடந்து வரலாறு, சமூகவியல், பாரம்பரியம், எனப் பல்வேறு கூறுகளைத் தாங்கி நிற்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய சிந்தனைகளாகும். அதே நிலைப்பட்டில்தான் பொன்னியின் செல்வன் நாவலில் தோன்றும் பெண் கதாபாத்திரங்களும் பெண்ணியச் சிந்தனைக்கு ஆட்பட்டு ஆய்வு செய்வதற்குறியன. பொன்னியின் செல்வன் நாவல் வரலாற்றுப் பின்புலத்தில் நயம்படக் கூறக் கூடியது ஆயினும் அதனையும் தாண்டி வரலாற்றில் விவரிக்கப்படாத பெண் கதாபாத்திரங்களின் ஆளுமைகளைக் கல்கி விவரிக்கும் பாங்கில் அவர்களுடைய ஆளுமையை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் சிக்கலாகும்.

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் பொன்னியின் செல்வன் நாவலில் தோன்றும் பெண் கதாபாத்திரங்களின் ஆளுமையையும் முக்கியத்துவத்தையும் ஆய்வு செய்வதாகும். இதன் பொருட்டு தற்போதைய ஆய்வுக்காகப் பண்புசார் ஆய்வு நெறி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அடிப்படையில் நூலக ஆய்வை முன்னிருத்தி

மேற்கொள்ளப்படுகிறது. இதற்காகப் புத்தகங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கான மூல நூலாகப் பொன்னியின் செல்வன் நாவல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளாக பொன்னியின் செல்வன் நாவல், பெண்ணியக் கோட்பாடு, பெண்ணியம், ஆளுமை போன்ற கருப்பொருள்களில் ஆக்கம் கண்டுள்ள கட்டுரைகள், ஆய்வுக் கோவைகள், நூல்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலக ஆய்வு நெறியைக் கொண்டு பொன்னியின் செல்வன் நாவல் மற்றும் பெண்ணியம் சார்ந்த தரவுகளும் அதற்கான ஆய்வு மற்றும் ஆதாரங்களும் திரட்டப்படும். இவ்வாறு திரட்டப்படும் தரவுகள் யாவும் சீர்மை செய்யப்பட்டு, நெறிப்படுத்தி எழுதுவதற்கும் மேலும் அவற்றை விளக்கப்படுத்தி உரை செய்வதற்கும் ‘ஹெர்மெனியூட்டிக்ஸ்’ எனப்படும் விளக்கமுறை ஆய்வு நெறி இந்த ஆய்வில் மற்றுமொரு துணை ஆய்வு நெறியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஹெர்மெனிடிக்ஸ் எனப்படும் விளக்கமுறை ஆய்வு என்பது ஓர் உரையை, குறிப்பாக பழைய நூல்களை விளக்கும் கலையாக விவரிக்கப்படும் ஒரு அணுகுமுறையாகும். அடிப்படையில் விளக்கமுறை ஆய்வு நெறியைக் கொண்டு ஓர் ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளில் உட்பொதிந்துள்ள புதைநிலைக் கருத்துகள் வெளிக்கொணரப்படும். பின்னர் இவை அனைத்தும் பெண்ணியக் கோட்பாட்டைக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்படும் (Bleicher, 2017).

அடிப்படையில் ஒரு நாவலில் கூறப்படுகின்ற செய்திகளாவன நேராடியாகக் கிடைப்பது இல்லை. அவை நாவலின் கதைக்களத்திற்கு ஏற்பவே நாவலாசிரியரால் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு பெறப்படுகின்ற தரவுகள் யாவையும் விளக்கமுறை ஆய்வு நெறியைக் கொண்டு பகுப்பாய்வு செய்யும்போதுதான் அதன் உண்மைப் பொருளைக் கண்டறிய முடியும் (Kern, *2011*). ஆகவே விளக்கமுறை ஆய்வு நெறியானது தற்போதைய ஆய்வில் தரவுகளைச் சேகரிப்பதற்கும் அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்தவற்கும் மிகப் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

## பெண்ணியக் கோட்பாடு

பெண்ணியக் கோட்பாடு என்பது சமூகவியல் கோட்பாட்டிலிருந்து கிளைத்தது. இக்கோட்பாடு மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா மற்றும் பிரிட்டனிலும் உருவாக்கம் கண்டது. அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியுற்ற இக்கோட்பாடு உலகம் முழுவதிலும் பரப்பம் கண்டது (Berg, 1978, p.6 & Krolokke & Sorenson, 2005, p.1).

உலகப்போர் நிகழ்ந்த காலத்தில் ஆணாதிக்கத்தின் காரணமாக பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டியவர்களான ஒரு போக்கு நிலவியது. இதன் தொடர்ச்சியானது ஆணாதிக்கத்தில் பெண்களின் மீதான அடக்குமுறையாக மாறத் துவங்கியது. இந்தக் காலத்தில் ஆண்கள் மட்டுமே பொருளாதாரம், அரசியல், ஆட்சி, சட்டம், ஓட்டுரிமை போன்றவற்றில் ஆளுமை உடையவர்களாகவும், பெண்கள் குடுப்பத்தைக் கவனித்துக் கொள்வதற்கு மட்டுமே பொறுப்புடையவர்களாகவும் வாழும் சமுதாய நடைமுறை கடைபிடிக்கப்பட்டது. மேலும் பெண்கள் ஆண்களின் பாலுணர்வைப் பூர்த்தி செய்யும் ஒரு கருவியாக மட்டுமே பார்க்கப்பட்டனர் (Freidan, 1963).

இவை பெண்களின் மத்தியில் ஒரு பெரிய மன அழுத்தத்தை ஏற்படுத்தியது. இந்த அழுத்தம் பெண்கள் மத்தியில் ஒரு போராட்ட குணமாக வெளிப்படத் துவங்கியது. இது முதலில் ஆண்கள் பெண்களிடன் கொண்டுள்ள அடக்குமுறையைக் கேள்வி கேட்பதில் இருந்து ஆரம்பமானது. இவ்விடத்தில் ஆணுக்குப் பெண் சமநிகரானவர் எனும் சித்தாந்தத்தை நிலைபெறச் செய்வதற்காகப் பெண்கள் ஒரு போராட்டமாகவே இதனை முன்னெடுத்தனர். அதன் பின்னர் இப்போராட்டமானது பெண்களின் மேம்பாட்டை நோக்கிப் பயணிக்கத்

துவங்கியது. அதன் அடிப்படையில் பெண்களின் மேம்பாட்டுக்குத் தடையாக விளங்கிய சிந்தனை, செயல்முறைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இப்போராட்டம் தகர்க்கத் துவங்கியது. அதன் பின்னர் இது பெண்களின் மேம்பாட்டு இயக்கமாகவே உலகம் எங்கும் வேரூன்ற ஆரம்பித்தது (Begum, 2019; Krolokke & Sorenson, 2005 & Darakhshan, 2018).

பெண்ணியக் கோட்பாடானது அடிப்படையில் மூன்று சித்தாந்தங்களை வலியுருத்தித் முன்னெடுக்கப்பட்டது. அதில் முதன்மையானது பெண் சுதந்திரம், மற்றது பெண்களின் மீதான அடக்குமுறையைக் களைதல், சட்ட ரீதியில் பெண்களுக்கான உரிமையை நிலைநாட்டல்.

### 1)பெண் சுதந்திரம்

பெண் சுதந்திரம் என்பது அடிப்படையில் பெண்கள் தங்கள் வாழ்க்கையின் இலக்கைத் தாங்களே தீர்மானித்தல் என்பதில் இருந்தே தோற்றம் கண்டது. இதன் வழி தங்களின் வாழ்க்கை, அதன் நோக்கம், அதனால் பெறப்படும் வெற்றி, அதன் மூலம் கிடைக்கப்பெறும் புகழ் போன்ற அடைவுகள் யாவுமே எவ்வகையிலும் ஆணாதிக்கத்தால் கட்டுப்படுத்தப்படாமல் இருத்த வேண்டும் எனும் கொள்கையின் அடிப்படையில் உறுதியாக நிறுவப்பட்டத (Berg, *1978).*

அடுத்ததாகப் பாலினச் சமத்துவம் நிறுவப்பட்டது. இவ்விடத்தில்தான் ஆணுக்குப் பெண் சரிநிகர் எனும் கொள்கை நிறுவப்பட்டது. இந்தப் பாலினச் சரிநிகர் சிந்தனையானது தனிமனிதன், குடும்பம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம் என அனைத்து துறைகளிலும் நிறுவப்பட்டது (Enyew & Mihrete, 2018).

தொடர்ந்து, சமுதாய அடக்குமுறைகளில் இருந்து விடுபடுதல் எனும் சுதந்திர சிந்தனையானது பெண்கள் சமுதாயத்தில் பாலின பேதத்தால் பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து மீட்சி அடையும் சிந்தனையைக் குறிக்கிறது. சமுதாயத்தில் பாலின பேதத்தால் பெண்கள் பல்வேறு துறைகளிலும், செயல்பாடுகளிலும் ஒதுக்கப்பட்டனர். இதனால் இவர்களுக்கு அடிப்படையில் கிடைக்கப்பெற வேண்டிய பல்வேறு மூலங்கள் மறுக்கப்பட்டதுடன், இவர்களுக்குள் பொதிந்துள்ள தனித்துவமும், திறமையும், ஆளுமையும் முடக்கப்பட்டது. இதிலிருந்து மீட்சி பெறும் நடவடிக்கையாகச் சமுதாய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் மேற்கொள்ளப்பட்டது (Hooks, 1984).

பெண்களின் எண்ணங்களுக்கு முழுமையான சுதந்திரம் எனும் சித்தாந்தம் வலியுறுத்தப்பட்டது. இச்சித்தாந்தமானது பெண்களின் எண்ணங்கள் மற்றும் சிந்தனைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்காமல் அச்சிந்தனைகளைச் செயல் வடிவம் காணச் செய்தல், பெண்களின் உரிமைகளை முழுமையாக அங்கிகரித்தல், மேலும் மனிதநேயத்துடன் அவர்களை அங்கிகரித்தல் ஆகியவற்றை வலியுறுத்தி மேம்படுத்தப்பட்டது (Beauvoir, 1984).

### 2)அடக்குமுறைகளைக் களைதல்

அடிப்படையில் அடக்குமுறையே எத்தகைய போராட்டத்திற்கும் அடிப்படையாகிறது. பெண்ணியச் சிந்தனையும் இதனை அடியொற்றியே தோற்றம் பெற்றது. இவ்விடம் அடக்குமுறை என்பது பெண்களை எந்தச் சூழலிலும் முடிவெடுக்கும் இடத்தில் வைக்காமல் ஆண்கள் அவர்களின்மீது ஆதிக்கம் செலுத்துதலும், சமூகக் கட்டுப்பாடுகள் எனும் போர்வையில் அவர்களை எல்லா இடத்திலும் ஒதுக்கி வைத்தலும் இப்போராட்டத்திற்கு வித்திட்டது. ஆகவே, பெண்கள் தங்களை ஆண்களுக்கு எவ்வித்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிறுவுவதற்காக இச்சிந்தனையை ஒரு போராட்டமாகவே முன்னெடுத்தனர். அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஆண்கள் பாலினம், சமுதாயக் கட்டமைப்பு, பண்பாடு, பாரம்பரியம், அரசியல், சட்டம் என எத்தகைய காரணத்தைக் கொண்டும் தங்களை அடிமைப்படுத்தக் கூடாது எனும் சிந்தனையை முன்னெடுத்தனர் (Thompson, 2000 & Karim & Azlan, 2019).

3) அரசியலில் / சட்ட அமைப்பின் அடிப்படையில் இவர்களுக்கான முன்னுரிமை நிலைநாட்டப்படுதல்

தொடக்கத்தில் அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் பெண்களின் உரிமைகள் எதுவும் பாதுகாக்கப்படவில்லை. பெண்களின் போராட்டமானது தேவையற்ற குழப்பமாகவும் பெண்களின் கூச்சலாகவுமே பார்க்கப்பட்டது. இதற்கு அடிப்படைக் காரணம் அப்போது அரசியல், சட்டத்துறை உட்பட அனைத்துமே ஆணாதிக்கத்தின்கீழ் இருந்ததுவே ஆகும். இதனால் பெண்களுக்கு என்று தனித்துவம் ஏதும் இல்லாத நிலை தோன்றியது. மேலும் அவர்களுக்கான பிரதிநிதித்துவம் எதும் இல்லா சூழல் நிலவியது. இந்த அவல நிலையை முற்றிலும் கலைவதற்கு அரசியல் மற்றும் சட்ட ரீதியிலான அணுகுமுறையே சாலச் சிறந்த தீர்வாகப் பார்க்கப்பட்டதால் இது பெண்ணியத்தில் முக்கியச் சிந்தனை அல்லது கொள்கையாக நிறுவப்பட்டது (Hanisch, 2021 & Picher & Whelehan, 2004).

இவ்வாறு நிலைபெற்ற சிந்தனைகள் யாவும் பெண்களின் உயர்வுக்கும், அவர்களின் தனித்துவம் மற்றும் ஆளுமைக்கு வித்திட்டது. அதன் வளர்ச்சியானது இறுதியில் பெண்ணியம் என்பது இன்றைய காலத்தில் சமூகவியலில் மறுக்க முடியாத ஒரு கோட்பாடாக நிலைபெற்றது.

## பொன்னியின் செல்வன் நாவலில் பெண்களின் ஆளுமை

பொன்னியின் செல்வன் நாவலில் தோன்றக் கூடிய குந்தவை, நந்தினி, பூங்குழலி, வானமாதேவி, வானதி, ஊமைராணி மந்தாகினி போன்ற முக்கியக் கதாபாத்திரங்கள் அனைத்துமே பல்வேறு நிலைகளில் சோழப் பேரரசில் தங்களின் ஆளுமைகளை முன்னிருத்தியுள்ளனர். அரசியல், அமைச்சியல், வீரம், என இவர்களின் ஆளுமை பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டுள்ளது.

## அரசியலில் / அமைச்சியல் பெண் கதாபாத்திரங்கள்

பொன்னியின் செல்வன் நாவலில் அரசியல் மற்றும் அமைச்சியல் என்று பார்க்கும்போது இரண்டு பெண் கதாபாத்திரங்கள் மிக முக்கியப் பங்காற்றியிருப்பதை அறிய முடிகிறது. இதில் முதன்மையாக வலம் வருபவர் குந்தவை. குந்தவை சுந்தரச் சோழனின் மகள், கரிகாலன் மற்றும் அருள்மொழி வர்மன் ஆகிய இருவருடைய தமக்கை. சோழ சாம்ராஜ்யத்தின் இளவரசி. பெண்ணியத்தின் அடிப்படையில் இவள் நாவல் முழுமையும் சோழ அரசியலிலும் அமைச்சியலிலும் பெரும்பங்காற்றியிருப்பது தெரிய வருகிறது. உண்மையில் சோழ மன்னனாகச் சுந்தரச் சோழன் இருந்த போதும், அவனுக்கான அமைச்சு மற்றும் அரசியல் ஆலோசகர்கள் இருந்த போதும் அவன் தனது மகாளாகிய குந்தவையின் அறிவுத்திறத்தின் மீதே மிகுந்த நம்பிக்கை கொண்டவனாக இருந்திருக்கிறான்.

சுந்தரச் சோழன் தனது காதல் மனைவி மந்தாகினி குறித்து அவளுடன் மட்டுமே பகிர்ந்து கொள்கிறான். இந்தச் செய்தியானது சோழ அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய செய்தியாகும். அதோடு சோழ வம்சத்திற்கும் இழுக்கைத் தேடித்தரக்கூடியது. அதனால்தான் இதனைச் சுந்தரச் சோழன் யாரிடமும் பகிர்ந்து கொண்டதில்லை. இரண்டு ஆண் மகன்கள் இருந்த போதும் இதனை அவர் பகிர்ந்து கொண்ட ஒரே நபர் குந்தவை மட்டுமே. ஏனெனில் சுந்தரச் சோழன் தனது மகளின் நுண்ணறிவு மற்றும் அரசியலிலும் சோழ அரசைக் காப்பதிலும் அவள் கடைபிடித்த உத்திகளையும் அவளது புத்திசாலித்தனத்தையும் நன்கு அறிவான். சோழப் பேரரசே ஆணாதிக்கத்தின் கீழ் இருந்தபோதும் அவர்களால் தீர்க்க முடியாத பிரச்சனைகளைத் தீர்ப்பதில் குந்தவை முதன்மை வகித்திருப்பது அவளின் ஆளுமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இதுவல்லாது ஆதித்த கரிகாலனும், அருள் மொழி வர்மனமனும் சோழப் பேரரசுக்கு உரிய இளவரசர்களாக விளங்கிய போதும் இவர்களும் தங்கள் சகோதரியாகிய குந்தவையின் அரசியல் ஞானத்திற்குத் தலைவணங்குபவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளர். இதில் ஆதித்த கரிகாலன் வந்தியத்தேவனிடன் சோழநாட்டில் நடக்கும் சதிச்செயல்

குறித்து தூது அனுப்பிய போது அதனைக் குந்தவையிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும் எனக் கட்டளையிடுவது ஆதித்த கரிகாலன் தன் தங்கையின் அரசியல் நுண்ணறிவின் மீது கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையைக் காட்டுகிறது. இவ்விடத்தில் சோழ நாட்டில் எத்தனையோ ஆளுமையும் மதியூகமும் கொண்ட ஆண்கள் அரசியலிலும், அமைச்சியலிலும், ஆட்சியிலும் இருந்த போதும் பெண் எனக் குந்தவையைச் சாதாரணமாக எண்ணாமல் அவளது திறன்மீது நம்பிக்கை கொண்டு ஆதித்த கரிகாலன் செயல்பட்டிருப்பது பெண்ணியத்திற்கு இவ்விடம் பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

மேலும், ஆதித்த கரிகாலனுடன் போரில் தோள்கோர்த்த வயதில் முதிர்ந்த அவனது தாத்தா மலையமானும் குந்தவையின் அரசியல் சாணக்கியத்தைப் பல இடங்களில் ஆதித்தனிடம் பாராட்டிப் பேசுவதோடு, அரசியலில் குந்தவையின் ஆலோசனையைப் பின்பற்றி நடக்கக் கூறுவது குந்தவையின் அரசியல் மற்றும் அமைச்சியல் ஞானத்திற்குச் சான்று பகர்கின்றது. மலையமானைப் போலவே சோழப் பேரரசின் தலைமை அமைச்சராகிய மதியூகி அனிருத்த பிரம்மராயரும் பல வேளைகளில் குந்தவையின் அறிவுத்திரத்தைப் பாரட்டுவது நாவலில் தெரிய வருகிறது. இன்னும் கூறப்போனால் நாவலில் அனிருத்த பிரம்மராயர் அத்துணை சுலபத்தில் யாருடனும் அரசியல் ஆலோசனைகளை நடத்துவதாகக் காட்டப்படவில்லை. ஆனால் குந்தவையிடம் மட்டும் பல இடங்களில் அரசியல் மதியூக ஆலோசனைகளையும் விவாதங்களையும் நிகழ்த்தியிருப்பதைக் காண முடிகிறது. ஓரிடத்தில் இலங்கைக்குச் சென்ற அருள் மொழி வர்மன் தஞ்சைக்குத் திரும்பக் கூடாது எனும் முடிவை அனிருத்த பிரம்மராயர் மேற்கொண்டிருப்பார். ஆனால், குந்தவை அவருடைய இந்த முடிவைத் தக்க காரணங்களை முன்னிருத்தி மாற்றி, வந்தியத்தேவன் மூலமாக அருள் மொழி வர்மனைத் தஞ்சைக்கு வரவைப்பாள். அரசியலில் துறைபோகிய அனிருத்த பிரம்மராயரின் முடிவில் கூட ஆதிக்கம் செலுத்தும் அளவுக்குக் குந்தவை அரசியல் நுண்ணறிவு உடையவளாக இருந்திருப்பது இவ்விடத்தில் நோக்கத் தக்கது.

இதுவல்லாது, சோழ அரசியலில் மிகவும் ஆதிக்கம் பொருந்திய பெரிய பழுவேட்டரையர் போன்றோரும்கூட குந்தவையின் ஆளுமையின்மீது அச்சம் கொண்டிருப்பது அறியப்படுகிறது. இதன்வழி சோழப் பேரரசின் அரசியலில் குந்தவையின் ஆதிக்கமானது பெண்ணியச் சிந்தனையில் நல்ல ஆளுமையை வெளிப்படுத்துவதாக அமைவதைக் காண முடிகிறது.

## வீரச் செயல்களில் பெண் கதாபாத்திரங்கள்

பொன்னியின் செல்வன் நாவலில் குந்தவை, நந்தினி போன்ற கதாபாத்திரங்கள் வீரம், துணிவு போன்ற பண்புகளுக்கு இலக்கணமாக விளங்கியபோதும், களத்தில் வீரப் பண்புகளை வெளிப்படுத்துவதில் பூங்குழலி கதாபாத்திரமே மிகவும் பொருத்தமானதாக இந்நாவலில் அமைந்துள்ளது. பூங்குழலி கடலில் களம் செலுத்தும் ஓடக்காரி. ஆனால் கடலில் பெருங்களங்களையெல்லாம் செலுத்தக்கூடிய மாலுமிகளுக்கு நிகரானவள். பெயருக்கு ஏற்றாற்போலவே தனது தலையில் பூவைச் சூடியிருப்பவள்.பொன்னியின் செல்வன் நாவலில் பல இடங்களில் பூங்குழலியின் வீரமானது வெளிப்பட்டிருக்கிறது.

பொதுவில் மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் மோதிக் கொள்வதை வீரமாகக் கருதுவர். ஆனால் மனிதர்கள் காட்டில் உள்ள விலங்குகளை வேட்டையாடுவதை மிகப்பெரிய வீரமாகக் கூறுவர். சங்கத் தமிழர் மரபில் தான் மனமுடிக்கும் பெண்ணின் கழுத்தில் கட்டும் தாலியை புலிப் பல்லால் கட்டுவது மரபாக இருந்திருக்கிறது. இந்தப் புலிப்பல்லானது கடையில் வாங்கும் பொருளல்ல. மாறாக, ஆண்மகன் தனது வீரத்தால் புலியைக் கொன்று அதன் பல்லை எடுத்துச் செய்யும் தாலி இது. எனில் ஆக்ரோசம் பொருந்திய காட்டு விலங்குகளைக் கொள்வது வீரத்தினும் வீரமாகக் கருதப்பட்டது. பூங்குழலியின் வீரமும் இத்தகையதே. ஒரு காட்சியில்

வந்தியத்தேவனிடன் மீனின் முள்ளால் ஆன ஆயுதம் ஒன்றை அவனது பாதுகாப்பிற்காகக் கொடுப்பாள். அதனைப் பெற்றுக் கொண்ட வந்தியத்தேவன் அந்த முள்ளைப் பற்றிக் கேட்கும்போது அதற்குப் பூங்குழலி தான் ஒரு முறை குகையில் ஒரு புலியுடன் போராடி அந்த முள்ளைக் கொண்டு தன்னந்தனியாக அதனைக் கொன்றதாகக் குறிப்பிடுவாள். அவளின் வார்த்தைகளைக் கேட்ட வீரனான வந்தியத்தேவனே வெலவெலத்துப் போவதுபோல அந்தக் காட்சி காட்டப்பட்டிருக்கும். இது பெண் என்ற போதும் ஆணின் வீரத்திற்குச் சிறிதும் தான் சளைத்தவள் அல்ல என்பதைப் பூங்குழலி நிரூபித்திருப்பதைக் காட்டுகிறது.

இதுபோலவே, மற்றொரு காட்சியில் வந்தியத்தேவனை இலங்கைக்குப் பூங்குழலி கொண்டு செல்லும் வேளையில் கடல் பயணத்தில் அச்சமும், பூங்குழலி மீது நம்பிக்கையின்மையும் கொண்ட வந்தியத்தேவன் கடலில் குதித்துவிடுவதாகக் காட்டப்படும். அவ்வேளையில் பூங்குழலி அவனைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்து அவனைக் களத்திற்குக் கொண்டு செல்லப் போராடுவாள். அவ்வேளையில் வந்தியத்தேவன் அவளுடன் வராமல் மல்லுக்கு நிற்க அவனை முகத்தில் தாக்கி மயக்கமுறச் செய்து களத்திற்குக் கொண்டு வருவாள். இவ்விடத்தில் ஆதித்த கரிகாலனுடன் பல யுத்த களங்களில் தோள்கொடுத்த வந்தியத்தேவன் எனும் வீரனையே வெற்றி கொண்ட செயலானது இவளது வீரத்திற்கு சான்று பகர்கிறது.

வீரத்திற்கு அடிப்படையே துணிவுதான். இந்தத் துணிவு பூங்குழலிக்குப் பிறவிக்குணமாக இருந்திருப்பது பல இடங்களிலும் காணப்படுகிறது. துணிவு என்பது உடல் பலத்தால் அல்லாமல் உள்ளத்தின் உறுதியால் தோன்றுவது. ஒரு கட்டத்தில் மந்தாகினியை அனிருத்த பிரம்மராயர் அரண்மனைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது மந்தாகினியைக் காப்பாற்றி அவளுக்குப் பதிலாக அவ்விடத்தில் இவள் அரண்மனைக்குச் செல்கிறாள். அரண்மனையில் இவள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அறிந்திருந்தாலும் துணிவுடன் செல்கிறாள். அதுமட்டுமல்லாமல் மந்தாகினியைக் கொண்டு வரச்சொன்ன அனிருத்த பிரம்மராயரிடம் துணிவுடன் பேசுகிறாள். இவளது துணிவுகண்டு அனிருத்த பிரம்மராயரே அயர்வதாக அக்காட்சியில் காட்டப்படுகிறது. இதுவல்லாது, அருள் மொழி வர்மனை புத்த விகாரத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு செல்தல், பாண்டிய ஆபத்தூதியாகிய மந்திரவாதி ஒருவன் இவளைக் காட்டில் துரத்திக் கொண்டு வரும் போது தந்திரமாக அவனைப் புதைகுழியில் தள்ளி விடுதல், இரவு பகல் என எந்த வேளையிலும் காடு, மலைகளில் மிகவும் துணிவுடன் சென்று வரக்கூடியவள், பேய் பிசாசுகளின் மீது அச்சமின்மை, சுந்தரச் சோழரிடம் பயமில்லாமல் பதில் அளித்தல் என இவளின் வீரத்திற்குச் சான்று பகரக் கூடிய காட்சிகள் நாவல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

பெண்ணியம் என்பது தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு மட்டுமல்ல. அதனையும் தாண்டி அதற்காகப் போராடுவது. போரட்டம் எனும் போது துணிவு அதில் பிரதானம். ஆனால், பொன்னியின் செல்வன் நாவலில் தோன்றும் பூங்குழலி கதாபாத்திரம் ஆண்களையும் விஞ்சும் வீரத்தை வெளிப்படுத்தியிருப்பது அவளது பெண்ணியத்திற்கு மகுடம் வைத்தாற்போல அமைவுறுகிறது.

## முடிவுரை

பொன்னியின் செல்வன் நாவலைப் பொருத்தவரையில் பெண்ணியக் கூறுகள் மிகச் செரிவாகவே காட்டப்பட்டுள்ளன. குறிப்பாகப் பொன்னியின் செல்வன் நாவலின் கதைக்களத்திற்கு அடிப்படைக் கருப்பொருளாக விளங்கக்கூடிய அரசியல் மற்றும் வீரம் ஆகிய இரண்டிலும், ஆண் கதாபாத்திரங்களுக்கு இணையாகவே பெண் கதாபாத்திரங்கள் தங்கள் ஆளுமையைச் செலுத்துவதாக இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. பொதுவில் பெண்ணிய ஆய்வானது ஆண்களிடமிருந்து தங்கள் உரிமையை மீட்டெடுக்கும் பெண்கள் எனும் கருப்பொருளில்தன் பல இலக்கியப்

படைப்புகள் படைக்கப்பட்டுள்ளன. ஆனால் பொன்னியின் செல்வன் நாவலைப் பொருத்த வரையில் பெண்கள் ஆணாதிக்கத்தில் கட்டுப்படுத்தப்பட முயற்சித்திருந்தாலும்கூட அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாகப் பெண்ணானவள் தனது தனித்துவத்தை நிலைநாட்டுபவளாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறாள். இச்சிந்தனையானது மேற்கத்திய பெண்ணியக் கோட்பாட்டில் காட்டப்பட்ட சிந்தனையினும் மாறுபட்டதாகவும் தமிழ்ச் சமுதயம் பெண்களின் சுதந்திரத்தில் முதிர்ச்சி உடையதாகவும் விளக்குகியது அறியப்படுகிறது.

மேலும், பாலியல் சமத்துவம் என்று வரும்போது அது ஏற்புடையதாக இருக்க வேண்டும். இக்கூற்றும் பொன்னியின் செல்வன் நாவலில் பெண்ணியச் சிந்தனையாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்நாவலில் பெண்ணியச் சிந்தனையானது பாலியல் பாகுபாடு அல்லது சமத்துவம் என்ற விவாதத்தின் பேரில் அல்லாமல் ஒரு பெண்ணானவள் தனது தகுதி, திறன் மற்றும் ஆளுமையினால் பெறுவதாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது பெண்ணியத்திற்கு மேலும் சிறப்பூட்டுவதாக அமைந்துள்ளது.

## References


Beauvoir, S.D. (1984). *After second sex: Conversation with Simone De Beauvoir.* New York : Pantheon Books .

Begum, F. (2019). A Study on History and Importance of Feminism in Modern World. *An International Journal in English, 10*(6), 202-210. Retrieved from www.the-criterion.com

Berg, B. (1978). *The Remembered Gate: Origins of American Feminism.* New York : Oxford University Press.

Bleicher, J. (2017). *Contemporary Hermeneutics: Hermeneutics as Method, Philosophy and Critique.* London : Routledge.

Darakhshan, R. (2018). Postcolonial Feminism: As a Recent Development in. *AGU International Journal of Research in Social Sciences & Humanities*, 1019-1023. Retrieved from http://www.aguijrssh.com

Enyew, B.E. & Mihrete, A.G. (2018). Liberal feminism: Assessing its compatibility and applicability in Ethiopia context. *International Journal of Sociology and Anthropology., 10*(6), 59-64. doi: 10.5897/IJSA2018.0769

Freiden, B. (1963). *The Feminine Mystique* . New Yok : W.W. Norton & Company, INC.

Goody, J. (2006). From Oral to Written: An Antropological Berakthrough in Storytelling. . In F. Moretti, *The Novel: Volume 1* (pp. 4-34). Princeton & Oxford : Princeton University Press .

Hanisch, C. . (2021). The Personal Is Political. In A. &. Shulman, *Women's Liberation!: Feminist Writings that Inspired a Revolution & Still Can* (pp. 82-85). United states of America : A Library of America Special Publication .

Hooks, B. (1984). *Feminist Theory from Margin to Center.* United States: Sounth End Press.

Jameson, F. (1988). *The Political Unconscious: Narrative as a Socially Symbolic Act.* United States of America : Cornell University Press .

Karim, M.H.B. & Azlan, A.A. (2019). Modernism and Postmodernism in Feminism: A Conceptual Study on the Developments of its Definition, Waves and School of Thought. *Malaysian Journal of Social Sciences and Humanities, 4*(1), 1-14. Retrieved from www.msocialsciences.com

Kern, S. (2011). *The Modernist Novel: A Critical Introduction.* New York : Cambridge University Press .

Krolokke , C & Sorenson, S. (2005). *Gender Communication Theories and Analyses: From Silence to Performance.* California : Sage Publications, Inc.

Mohan, M. (2023, April 26). *The women of Kalki's Ponniyin Selvan, through the eyes of a Gen Z reader (para.3)*. Retrieved from The News Minute. : https://www.thenewsminute.com/article/women-kalkis-ponniyin-

selvan-through-eyes-gen-z-reader-176376

Pilcher & Whelehan . (2004). *50 Key Concepts in Gender Studies* . London, Thousand Oaks, New Delhi: Sage Publication .

Sankaravelayuthan, R. (2019, November ). Lessons from Translation of a Historical Novel from. *Language in India, 19*(11), 136-149. Retrieved from www.languageinindia.com

Shaa. (2018, November 19). *Women In Kalki Krishnmurthy's 'Ponniyin Selvan' Portray Girl Power (para.5 & 6)*. Retrieved from Women's Web: https://www.womensweb.in/2018/11/women-in-kalki-krishnmurthys-ponniyin-selvan-portray-girl-power/

Sundaram, M.R.M. . (2020, November 28). *Ponniyin Selvan – an inquiry into Kalki's historical fiction (para.11)*. Retrieved from Kalki Krishnamurthy: His life and times: https://www.kalkibiography.com/ponniyin-selvan-an-inquiry-into-kalkis-historical-fiction/

Swingewood, A. . (1975). *The Novel and revolution* . London & Basingstoke : The Macmillan Press LTD .

Thompson, B. (2002). Multiracial Feminism: Recasting the Chronology of Second Wave Feminism. *Feminist Studies, 28*(20), 336-360. doi:https://doi.org/10.2307/3178747

Varatharasan, M. (1992). *Tamilzh Ilakiya Varalaru* . Sakitya Academy : New Dehli .